## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகக் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின்

பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகக் கல்லூரியின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகக் கல்லூரியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழக கல்லூரியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழக கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகக் கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நியமம் இலக்கம் 07 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100 சதவீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் நூலகப் புத்தகங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதன் நியாயமான பெறுமதி (Fair Value) நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டொன்றிற்கு புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றிற்காக 33.33% இதன் பிரகாரம் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு முதல் 03 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் புத்தகங்களின் பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். அக்கணக்கிடல் எதிர்வரும் ஆண்டுகளில் சரியாக பெறுமானத் தேய்வு செய்ய முடியுமாக இருக்கும் | நியமம் இலக்கம் 07 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் முகப்பு பெறுமதி அறிக்கையிடப்பட்ட திகதியிலான முகப்பு பெறுமதி பயன்படுத்தப்பட:டு தீர்மானிக்கப்படும் பெறுமதி பொருண்மையாக மாற்றமுராமல் போதியளவு வெளிப்படைதன்மையுடன் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 26,000 தொகையான மீளச் செலுத்தாத வைப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மீளச் செலுத்தப்படாத ரூபா 26,000 வைப்புத் தொகையை அடுத்த நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்ய முடியும் | அட்டுறு எண்ணக்கருவின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு ரூபா 250,000 தொகையாக இருந்த போதும் நிதி நிலைமை கூற்றில் ரூபா 350,000 எனக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு ரூபா 350,000 தொகையாக காட்டப்பட்டிருந்தது. இதனை 2019 கணக்காண்டின் போது ஒதுக்கீடு செய்யும் சீராக்கம் செய்யப்படும் | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நாட்குறிப்புக்களில் தரவுகளுடன் ஒப்பிட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் 07 வருடங்களில் ரூபா 1,468,694 ஆன வருடாந்த பெறுமானத் தேய்வு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,468,694 ஆன நிலையான சொத்துக்கள் பதிவேடு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சரி செய்யப்படும் | நிறுவகத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக்குழுக்கள் அல்லது அறிக்கை.

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** | **அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி** | **வேறுபாடு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 118,182,416 | 120,198,753 | 2,016,337 | ஆதனங்கள் பெறுமதி கூட்டும் போது இடம் பெற்ற வேறுபாட்டை சரி செய்வதற்கு நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரி செய்யப்பட வேண்டும். | செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கு இடையே ஒப்பிட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| செலுத்த வேண்டிய செலவினம் | 3,202,478 | தனியான மீதிகள் பட்டியல் | மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்த உருப்படிகள் தொடர்பாக வெவ்வேறு பதிவேடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்குகளுடன் உரிய அட்டவணைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| நிறுத்தி வைத்தல் | 121,432 | | | |
| நானாவித கடன் | 1,852,000 | | | |
| வைப்புக்கள் மீளச் செலுத்த வேண்டிய | 199,620 | | | |
| வைப்புக்கள் | 748,775 | | | |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) <u>சட்டங்கள்</u> | | | |
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | ஒரு உத்தியோகத்தரிடம் மீளாய்வாண்டில் உழைக்கும் போது வருமானத்தில் ரூபா 43,588 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வின் ஆலோசனையின் பிரகாரம் சரி செய்யப்பட வேண்டும். | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) <u>நிதிப்பிரமாணம் 880</u> | அரசின் பணம், வருமானம், முத்திரைகள், பொருட்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இதன் பிறகு உங்களது அறிவுறுத்தலின் பிரகாரம் பிணைப் பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை இருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

(இ) <u>சுற்றறிக்கை</u>

| | | | |
|---|---|---|---|
| 2002 நவம்பர் 28 இன் IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | இதன் பிறகு உங்களது அறிவுறுத்தலின் பிரகாரம் பிணைப் பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,235,014 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,232,106 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,467,120 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மூலதன பெறுவனவு மற்றும் ஏனைய வருமான அதிகரிப்பு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்லூரி அமைந்துள்ள 5.4 ஹெக்டேயர்க்கான கையேற்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 6.342,129 தொகையான நிர்மாணங்கள் மற்றும் நவீனமயமாக்கல் மேற்கொள்ளபபட்டிருந்தது. | காணியை கையேற்ப தற்கான அமைச்சிற்கு பல தடவை அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைக்கும் வரை நிறுவகத்தின் செயற்பாடுகளை நிறுத்தி வைக்க முடியாது குறிப்பிடப்பட்ட படி இரண்டு ஆண்டுகளுக்குள் மாணவர்களின் பாட நெறிகளை பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறில்லா விட்டால் தற்பொது அரசின் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதி சிக்கனமற்றதாக இருக்கும் ஆதலால் அத்தியவசிய நிர்மாணங்களை மேற்கொள்ள வேண்டும். | காணியை கையேற்பு துரிதமாக மேற்கொள்ள செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குளிரூட்டி மற்றும் காற்றுச் சீராக்கி பாடநெறிகளுக்காக 2018 யூன் 05 ஆந் திகதி முதல் காட்சிப்படுத்துனர். ஒருவர் இல்லாமை மற்றும் விவசாய தொழில்நுட்ப பாடநெறிக்காக இரண்டு ஆண்டு களாக காட்சிப்படுத்துனர் ஆய்வுகூட உதவியாளர் இல்லாமை மற்றும் கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக போதியளவு உபகரணங்கள் காணப்படாமை காரணமாக அப்பிரிவுகளில் செயற்திட்ட நடவடிக்கைகள் செயற்திறனாகவும் பேணிச் செல்ல முடியாமல் இருந்தது. | பல தடவை விளம்பரம் வெளியிடப்பட்ட போதிலும் பொருத்தமான விண்ணப்பதாரிகளை தேடிக் கொள்ள முடியாதிருந்தது. ஆதலால் இம் முறையும் 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. | பதவியணியினரை போதியளவில் காணப்படாமையால் அப் பிரிவுகளின் நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்ள முடியாமல் இருந்தது. குறித்த பதவிக்கு வராமைக்கான காரணங்கள் அறியப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | மோட்டார் வாகன தொழில்நுட்ப பாடநெறிக்காக காட்சிப்படுத்துனர் இல்லாமை மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக Auto Mobile Continuing traine panel ஒன்று இல்லாமை காரணமாக அப்பிரிவுகள் செயற்பாடுகளை செயற்திறனாக பேணிச் செல்ல முடியாதிருந்தது. | பல தடவை விளம்பரம் வெளியிடப்பட்ட போதிலும் பொருத்தமான விண்ணப்பதாரிகளை தேடிக் கொள்ள முடியாதிருந்தது. ஆதலால் இம் முறையும் 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. | குறித்த பதவிக்கு வராமைக்கான காரணங்கள் அறியப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |
| (ஈ) | மேம்படுத்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு இலக்கிடப்பட்ட மாணவர்கள் அறிவூட்டப்படாமை காரணமாக மீளாய்வாண்டில் பாடநெறிகளுக்கு மாணவர் களை அனுமதிப்பதற்கு இரண்டு முறை பத்திரிகை விளம்பரம் மேற்கொள்ள நேர்ந்தது. | பல நிறுவனங்களின் கண்காட்சிகளின் போது இந்த கூடங்களை பொறுப்பேற்று மேம்படுத்தல் செயற்பாடுகளை மேற் கொண்ட போதும் மாணவர்களின் வேண்டுகோள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை நகருக்கு வெளியே அமைந்திருப்பதே இதற்கான காரணமாகும். | பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவன மட்டத்தில் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் நிரந்தர பதவியணிக்குரிய 16 விரிவுரையாளர்களின் கல்வி செயற்பாடுகள் தொடர்பாக இரண்டு விரிவுரையாளர்கள் மதிப்பீடு மாத்திரமே மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் 35 வெளிவாரி விரிவுரையாளர்களின் விரிவுரை தொடர்பாக எந்தவொரு மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அம் மதிப்பீடு பணிப்பாளரினால் மேற் கொள்ளப்படுகின்ற போதும் அவற்றின் புள்ளி விபரங்கள் தரவு பகுப்பாய்வு செய்தல் வெளித்தரப்பினரால் மேற் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சகல விரிவுரையாளர்களின் விரிவுரை நடவடிக்கை மதிப்பீடு முறைமை ஒன்ற தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரிய திகதியில் பங்களிப்பு தொகை கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக ரூபா 2,574 மிகை கட்டணமாக செலுத்த நேர்ந்தது. | ஏற்றுக்கொள்கிறேன் இது தொடர்பாக 2019.05.03 முகாமைத்துவ சபைக்கு தொடர்புபடுத்தப்பட்டது. | மிகைக் கட்டணத்தை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சபை ஆளுனர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இக்கால எல்லைக்குள் நிறுவகத்தின் உதவி பதிவாளர் பதவி மாற்றப்படாமையால் பிரச்சினைகளுக்குரிய நிலைமையொன்று காரணமாக முடியாமல் இருந்தது. எதிர்வரும் காலங்களில் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் |
| (ஆ) | மாணவர் அனுமதி ஒவ்வொரு ஏப்ரல் மாதமும் மேற்கொள்ளப்படுகின்ற போதும் மீளாய்வாண்டிற்காக மாணவர் அனுமதி 6 மாதங்களின் பின்னரே மேற்கொள்ளப் பட்டிருந்தன. | அனைத்து பல்கலைக்கழக கல்லூரிகளுக்கும் மாணவர்களை ஒரே தடவையில் அனுமதிப்பது பொருத்தமென நிறுவன பணிப்பாளர்கள் மற்றும் உப வேந்தர் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டமையால் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக தீர்மானத்திற்கு வர தாமதம் ஏற்பட்டது. பின்னர் மீண்டும் அக்கருத்து மாற்றப்பட்டமையால் நிறுவனங்களுக்கு தேவையான பிரகாரம் மாணவர்களை அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. அதனால் தாமதம் ஏற்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதியில் மாணவர்களை அனுமதிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | 19 பாடநெறிகளுக்காக 270 மாணவர்கள் அனுமதிக்க முடியுமாக இருந்த போதும் மீளாய்வாண்டிற்காக 223 மாத்திரமாக இருந்ததுடன் அதில் 08 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். | மாணவர்களை தெரிவு எழுத்து மூல பரீட்சை மற்றும் நேர்முர பரீட்சை மூலமமாகும். அதன் போது பாடநெறிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் மாணவர்களை அனுமதிக்கின்றனர். எனினும், ஆங்கில மொழி மூலம் | பொருத்தமான நடைமுறையில் கூடுதலான மாணவர்களை அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கல்வி பயில்வது சிரமம் ஏனைய தொழில்களுக்காக விலகுதல் போன்ற விடயங்களினால் பாட நெறியை விட்டுச் சென்றுள்ளனர். | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக அனுமதிக்கப்பட்ட 104 மாணவர்களுக்கு எவ்வித பரீட்சைகளுக்கும் உட்படுத்தப்படாமல் அனுமதிக்கப்பட்டிருந்தனர். | இந் நிறுவனத்தின் அமைவிடம் கஷ்டமாக இருப்பதால் மாணவர்களின் கேள்வி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காற்றுச்சீராக்கி போன்ற சில பாட நெறிகளுக்கான கேள்வி மிகவும் குறைந்தளவிலாகும். அவற்றிற்கு ஒரு முறை விளம்பரம் மூலம் அனுமதிக்கும் அளவு குறைவாகும். மீண்டும் பத்திரிகை விளம்பரம் மூலம் அனுமதிப்பதற்கு 2,3 மாதங்கள் காலம் எடுக்கப்படுகின்றது. ஆதலால் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் பேரில் போட்டிப் பரீட்சை இல்லாமல் அனுமதிக்கப்பட்டனர். | சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்கள் குறித்த பாட நெறிக்கு பொருத்த மாணவர்களை என உறுதிப்படுத்தியதன் பின்னர் ஒவ்வொரு பாடநெறிக்கும் இணங்க மாணவர்கள் அனுமதிக்கும் முறை இடம் பெற வேண்டும். |
| (உ) | 2015 ஆம் ஆண்டில் 04 பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட 33 மாணவர்கள் மீளாய்வாண்டின் பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த போதிலும் தொழலில் ஈடுபடுத்துவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தின் TVEC சான்றிதழ் பெற்றுக்கொண்டதன் பின்னரே பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அது இந் நிறுவனங்களில் அப்பரிசோதனைக்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனினும், நிறுவனத்தின் நிர்வாக மதியுரையாளரின் ஆலோசனையின் பிரகாரம் பின்தொடர் நடவடிக்கை எடுத்து தற்போது பதிவேடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன | தொழில்துறை தகைமை பெற்று விலகிச் செல்லும் மாணவர்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஊ) | 2015 – 2018 வரையான காலப் பகுதியில் அனுமதிக்கப்பட்ட 781 மாணவர்களில் 112 மாணவர்கள் அதாவது 14 சதவீதம் அளவில் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்ததுடன் இந் | பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கு ஆங்கில மொழி மூலம் கற்றல் மற்றும் கணிதம் போன்ற விடயங்களை விளங்கிக் கொள்வதில் சிக்கல் காரணமாக உள்ளன. | பாடநெறிகளை விட்டுச் செல்லும் காரணங்கள் ஆராயப்பட்டு தீர்வு காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமையை குறைத்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | ஆங்கில பிரிவினால் மூலம் அதற்காக மேலதிக மணித்தியாலங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் கணிதம் தொடர்பாக வயம்ப பல்லைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் அழைக்கப்பட்டு வெளிவாரி விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன. | |
| (எ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 03 பரீட்சைகளில் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 07 மாதங்கள் முதல் 11 மாதங்கள் காலம் கடந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் 03 பரீட்சைகளை நடாத்தி 06 மாதங்கள் கடந்தும் பெறுபேறுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சை பெறுபேறு அந் நிறுவனத்தில் ஒரு மாதத்திற்குள் முதலாவது தவணை பரீட்சை முடிவடைந்து TVEC இற்கு இரண்டாவது பரீட்சைக்கு அனுப்பி வைக்கப்படும் TVEC பெறுபேறுகளை தாமதம் இடம்பெறுகின்றன. இது தொடர்பாக SSDP செயற்திட்டத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர் எமது நிறுவனத்தினால் தெரிவு செய்த பரிசோதகர்களின் பட்டிய லொன்று அங்கீகரிக்கப்பட்டு TVEC அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. | உரிய திகதிகளில் பெபேறுகளை வெளியிடுவதற்கு நடைமுறையொன்று தாபிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் ரூபா 2 மில்லியன் பெறுமதியான 345 புத்தகங்கள் நூலகத்திற்கு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அப்புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறென் 2018 ஆம் ஆண்டில் ரூபா ஏழு மில்லியனான புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. | பெறுகை திட்டதின் பிரகாரம் பெறுகை இடம் பெற வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் 08 பாட நெறிகளுக்கு தோற்றிய 152 மாணவர்களின் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்தது | அனைத்து பாடங்களும் சித்தியடைந்தவர்கள் 41 ஆகும். எனினும், ஏனைய மாணவர்களும் அநேகமாக ஒன்று அல்லது இரண்டு பாடங்களிலே சித்தியடையாமல் இருந்தனர். அவற்றிலும் அவ்வாண்டில் தோற்றி சித்தியடையவர். | பெறுபேறுகள் அங்கீகரிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | போதியளவு மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்காமல் குறைந்த | சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கையின் பிரகாரம் பெறுகை செயற்பாடு | முறையான அங்கீகாரமொன்றுடன் முற்பணத்தொகை |

| | | | |
|---|---|---|---|
| | விலை சமர்ப்பித்தவர்களை நிராகரித்த காரணமாக அந் சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கை வழ்கும் போது ரூபா 398,424 ஆன நட்டமொன்ற இடம்பெற்றிருந்தது. | அதாவது தொழில்நுட்ப குழு இது தொடர்பில் சரியாக நடவடிக்கைகள் எடுத்துள்ளது. எவ்வாறாயினும் இது நட்டமொன்றாக குறிப்பிட்டு இருந்த போதும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது அத்துடன் நிறுவனத்தின் மிகவும் சிறிய பிரிவு ஒன்றாயினும் சுத்திகரிப்பு ஒப்பந்தம் என்பதால் அத்தியவசிய சேவையொன்றாகும். | கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | கட்டுப்பாட்டு சபையின் அல்லது அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 1,566,000 ஆன முற்பணம் கட்டிட திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. | இந்த ஒப்பந்தம் அரசிற்குரிய கட்டிட திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை தேவைப்படுமாயின் இது தொடர்பாக கட்டிட திணைக்களத்திடமிருந்து விபரங்களை பெற முடியும். | முறையான அங்கீகாரத்துடன் முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் |
| (ஔ) | போதியளவு காரணங்கள் இல்லாமல் இந்திய உற்பத்தி நிராகரிக்கப்பட்டு சீனாவில் ஒன்று சேர்க்கப்பட்ட மின்பிறப்பாக்கியொன்றை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்த காரணத்தினால் ரூபா 1,276,385 ஆன பணம் கூடுதலாக கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. | இது தொடர்பாக பல்கலைக் கழக தொழில்நுட்பக்குழு வயம்ப பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் பிரகாரம் தீர்மானிக்கப் பட்டது. எனினும் பல்கலைக்கழக கல்லூரியின் பெறுகை குழுவும் ஏற்றுக் கொண்டுள்ளது. இத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக இலங்கை மின்சார சபையின் முன்னால் பொது முகாமையாளர் செயற்பட்டிருந்தார். | உரிய பெறுகை நடை முறைக்கு இணங்க வேலை மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு ஆரம்பித்தன் போது வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 6.057,000 பெறுமதியான மீண்டெழும் | மீண்டெழும் செலவினங்களுக்கு பாதீடு பொது திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றது. | பெறுகை திட்டம் சகல பெறுகைகளையும் உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செலவினம் தொடர்பாக பெறகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எவ்வாறாயினும் தேவையா யின் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படலாம். | |
| (ஆ) | கட்டுப்பாட்டு சபையின் அல்லது அமைச்சின் அங்கீகாரமின்றி பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகியுள்ள உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் ரூபா 6,693,000 தொகையான 02 ஒப்பந்தங்கள் கட்டிட திணைக்களத்திற்கு வழங்கும் போது அதற்காக உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | 2018 செப்தெம்பர் 03 ஆந் திகதி K/U/LD/I/R 2016.09.03 ஆந் திகதி பேராசிரியர் சமித ஹெட்டிகே பணிப்பாளர் (CEO) அவர்களின் கையொப்பத்துடன் கட்டிடத் திணைக்களத்தின் ஒப்பந்த பிரிவிற்கு வழங்கப்பட்டது. பல்கலைக்கழக கல்லூரியின் பொறியியலாளர் சேவை மற்றும் BOQ தயாரிப்பதற்கு வசதிகள் இல்லாமை காரணமாகவே இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் அரச நிறுவனமொன்றுக்கே கையளிக்கப்பட்டது.<br>எதிர்வரும் ஒப்பந்தங்கள் தொடர்பாக உங்களது ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தம் வழங்கும் போது பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட வேண்டியதுடன் முறையான அங்கீகாரத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | ரூபா 04 வரை அளவிலான அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு எல்லையை விஞ்சி கல்லூரியின் பெறுகை குழுவினால் ரூபா 4,773,535 ஆன மின்பிறப்பாக்கியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | மின்பிறப்பாக்கியின் பெறுமதி ரூபா 4 மில்லியனை குறைவாகும். ஏனையவை கூறுவிலை நிறுவுதல் தொடர்பான விலையாகும். எவ்வாறாயினும், இவை அனைத்திலும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் எதிர்காலத்தில் உங்களது அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படுத்தப்படும். | உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்லும் போதும் மரணிக்கும் வழங்கப்பட்ட பொருளிருப்பு பொருட்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடைமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அனுமிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் கல்விசார் பதவியணியனரின் 02 பதவிகளில் 09 வெற்றிடங்களும் இரண்டு பதவிகளில் மிகையொன்றும் கல்விசார் பதவியணியினரில் 03 பதவிகளில் 11 வெற்றிடங்களுமாக காணப்பட்டன. | காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக கல்லூரியின் நோக்கங்கள் மற்றும் நடவடிக்கைகளை செயற்திறனாக மேற் கொள்வதற்கு பதவிகள் வெற்றிடங்களை துரிதமாக நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) வெற்றிட பதவிகளுகக்காக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்யாமை காரணமாக ரூபா 3,440,281 தொகை வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்ய நேர்ந்தது | | |
| (இ) பராமரிப்பு உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை காரணமாக அதறகாக பொருத்தமான ஆளோருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஈ) விரிவுரையாளர் பதவிக்காக 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 25 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 08 பேர் சேவையை விட்டுச்சென்றிருந்தனர். | | |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல் கோவையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 04 ஆண்டுகள் கடந்திருந்த போதும் உள்ளக் கணக்காய்வு பிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக் கணக்காய்வு பிரிவொன்று மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படுகின்றது. சகல பல்கலைக்கழக கல்லூரியின் உத்தியோகத்தர்கள் இக் குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எவ்வாறாயினும் பல்கலைக்கழக கல்லூரியொன்றில் உள்ளக் கணக்காய்வு பிரிவொன்று நடாத்துச் செல்லல் விரும்பப்படு கின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் உள்ளகக் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூலை 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக் கணக்காய்வு பிரிவொன்று மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்றது. சகல பல்கலைக்கழக கல்லூரியின் உத்தியோகத்தர்கள் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எவ்வாறாயினும் பல்கலைக்கழக கல்லூரியொன்றில் உள்ளக் கணக்காய்வு பிரிவொன்று நடாத்திச் செல்லல் விரும்பப்படுகின்றது. | உள்ளக் கட்டுப்பாட்டு முறையை பலப்படுத்துவதற்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரனகாரம் கணக்காண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாதீடு 2017 திசெம்பர் 22 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பாதீடு தயாரிக்கும் போது கணக்காய்வு அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | காணப்படும் சட்டங்கள், விதிகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் கட்டுப்பாட்டுடக் கருவியொன்றாக பாதீட்டை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்ககளை இனங்காணும் போது முழுமையான, நியாயமான, தரமான கல்வியொன்றை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் புராகவும் கற்கும் சந்தர்ப்பத்தை வழங்குதலின் கீழ் இலக்குகள் இனங்காணப்பட வேண்டிய போதிலும் வறுமையை ஒழித்தல் மாத்திரமே இனங் காணப்பட்டிருந்தது. மேலும் இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்படாதிருந்ததுடன் அடிப்படை ஆண்டும் அடிப்படை தரவுகளும் இனங்காணப்பட்டி ருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | வறுமையை ஒழிக்கும் நோக்கத்திற்கு மேலதிகமாக காணப்படும் நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தகைமையுடைய மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்கறை காரணமாக உரிய நோக்கங்கள் மற்றும் இலக்கினை அடைந்து கொள்வதற்கான செசயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் பல்கலைக்கழக கல்லூரியினால் தொடர்புடைய தரப்பினர் இனங்காணப்பட்டு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் சுற்றறிக்கை மூலம் அறவூட்டுதல் இடம்பெறவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | வறுமையை ஒழிக்கும் நோக்கத்திற்கு மேலதிகமாக காணப்படும் நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |